KS_B Kantonsspital Baden
Ort der Gesundheit

Kantonsspital Baden AG
CH-5404 Baden
www.ksb.ch

# KSB இல் சத்திரசிகிச்சைக்கு முன்பாக மற்றும் பின்பாக நடந்துகொள்ளும் விதம்

தகவல

**Anästhesie**
Sprechstunde
Direkt +41 56 486 31 46
ipas.chirurgie@ksb.ch

நீங்கள் சேர்ந்து பங்களிப்பதன் ஊடாக, ஒவ்வொரு மயக்க மருந்து வழங்கும் நடைமுறையின்போதும் ஏற்படக்கூடிய விரும்பத்தகாத பக்கவிளைவுகள் அல்லது பிரச்சினை-களைத் தவிர்ப்பதற்கு உதவ முடியும். தயவுசெய்து பின்வரும் பாதுகாப்பு ஒழுங்குகளை நீங்கள் கவனத்தில் எடுத்து, இடைநடுவில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தடுக்க உதவுங்கள்:

## உண்ணாதிருத்தல்

வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்படாதிருந்தால், பின்வரும் உண்ணாதிருக்கும் ஒழுங்குமுறை செல்லுபடியாகும்:

சத்திரசிகிச்சை நாளில் வருகை தருவது:

- வருகைதருவதற்கு 6 மணித்தியாலங்கள் முன்பாக திடமான உணவை உண்ண அனுமதியுண்டு, அதன்பின்பு இல்லை.
- தெளிவான நீர் (கார்போனிக் வாயு கலந்த∴கலக்காத தண்ணீர், இனிப்புச் சேர்த்த தேநீர்∴கோப்பி பால் ∴ கிறீம் அற்றது) வருகைதருவதற்கு 2 மணித்தியாலங்கள் முன்பாக குடிக்க அனுமதியுண்டு, அதன்பின்பு இல்லை.
- விதிவிலக்கு: பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுடன் ஒரு முறடு தண்ணீருக்கு அனுமதியுள்ளது.
- சத்திரசிகிச்சை ஒழுங்குகளில் திட்டமிடாத தாமதங்கள் ஏற்படலாம் என்பதால், வருகைதருவதற்கு 2 மணித்தியாலங்கள் முன்பாக ஒன்று தொடக்கம் இரண்டு குவளை தண்ணீரைக் குடிக்குமாறு பரிந்துரைக்கின்றோம். இதனால் சத்திரசிகிச்சைக்கு முன்பாகவும் பின்பாகவும் நீங்கள் நலமாக இருப்பதை உணர்வீர்கள்.

சத்திரசிகிச்சைக்கு ஒருநாள் முன்பாக வருகைதருவது:

- வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்படாதிருந்தால், நீங்கள் உண்ணாமல் வருகைதரத் தேவையில்லை.

## மருந்துகள்

- மயக்குவிக்கும் வைத்தியர் உங்களுக்குப் பரிந்துரைத்தபடி, உங்கள் காலை மருந்துகளை நீங்கள் எடுங்கள்.
- மயக்குவிக்கும் வைத்தியருடனான-முன்கலந்துரையா-டலுக்கும் சத்திரசிகிச்சைத் தவணைக்கும் இடையே உங்கள் மருந்துகளில் அல்லது உங்கள் உடல்நிலையில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், தயவுசெய்து மயக்குவிக்கும் வைத்தியரை 056 486 31 44 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.
- நீங்கள் எடுக்க வேண்டிய அனைத்து மருந்துகளையும் நீங்கள் வருகைதரும் நாளில் எடுத்து வாருங்கள்.

மருந்துகள்:

________________________

________________________

________________________

## நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்கள்

- கழற்றக்கூடிய நகைகள் மற்றும் வேறு பெறுமதியான பொருட்களை வீட்டில் வையுங்கள். தற்சமயம் தொலைந்தால் KSB அதற்குப் பொறுப்பல்ல.
- இலத்திரனியல் பொழுதுபோக்குக் கருவிகள் மற்றும் வேலை உபகரணங்கள் வைத்தியசாலை நாட்களில் பொழுது போவதை இலகுவாக்கும், இருப்பினும் இவை எளிதாகத் தொலையக்கூடியன. நீங்கள் அவதானமாக முடிவெடுங்கள்!
- இசைகேட்கும் கருவிகள் (MP3-கருவி, கைத்தொலைபேசி விமானப்பயண வடிவமாக) திட்டமிடப்பட்ட பகுதி மயக்கலின்போது சத்திரசிகிச்சை மண்டபத்திற்கும் (OP) கொண்டுசெல்ல அனுமதியுள்ளது. அது தொலைந்தாலோ அல்லது சேதமடைந்தாலோ எவ்விதமான பொறுப்புகளும் நிராகரிக்கப்படுகின்றது.
- குத்தியுள்ள ஆபரணங்கள் எரிகாயங்களை ஏற்படுத்தலாம். அவற்றை கழற்ற முடியுமானால் வீட்டில் வைத்துவிடுங்கள். இயலாவிட்டால் அது குறித்து வைத்தியருக்குத் தெரிவியுங்கள். எரிகாயங்கள் ஏற்பட்டாலோ அல்லது தொலைந்தாலோ எந்தவிதமான பொறுப்புகளும் நிராகரிக்கப்படுகின்றது.

## பார்க்கும்- மற்றும் கேட்கும் உதவிகள்

- கண்ணாடி மற்றும் கண்பார்வை வில்லைகளை சத்திரசிகிச்சை நிலையத்திற்கு எடுத்துச்செல்லக்கூடாது, இருப்பினும் மிகவும் அதிகமான பார்வைக்குறைவு இருந்தால் அனுமதிக்கப்படும்.
- கேட்கும் கருவிகளை பகுதியாக மயக்குவதாக இருந்தால் சத்திரசிகிச்சை நிலையத்திற்கு எடுத்துச் செல்லலாம்.
- அவை தொலைந்தாலோ அல்லது சேதமடைந்தாலோ எவ்விதமான பொறுப்புகளும் நிராகரிக்கப்படுகின்றது.

## சுகாதாரம

- சத்திரசிகிச்சைக்கு வரும்போது சுத்தமாக வாருங்கள் (குளித்தல் அத்துடன் பொக்கிளை சுத்தம்செய்து), இருப்பினும் எவ்வித அழகுசாதனப் பொருட்களையும் பூசாமல் மற்றும் தோல்பராமரிப்பு கிறீம்∴திரவங்களைப் பாவிக்காமல்.

8 0 0 0 0 0 0 4 9 1

Kantonsspital Baden AG
CH-5404 Baden
www.ksb.ch

## செயற்கைப் பற்கள்

- முழுமையான செயற்கைப் பற்கள் அல்லது பகுதிச் செயற்கைப் பற்கள் சத்திரசிகிச்சையின்போது விலகிச்செல்லலாம், காயங்களை ஏற்படுத்தலாம், பாதிப்படையலாம் அல்லது தொலைந்து போகலாம்.
- இக் காரணத்தால் செயற்கைப் பற்களை சத்திரசிகிச்சைக்கு முன்பாகக் கழற்றி உங்கள் பெயர் எழுதப்பட்ட ஒரு விசேட குவளையில் இட்டு நீங்கள் தங்கியுள்ள வைத்திசாலை அறையில் வைத்துவிடவேண்டும்.

## சத்திரசிகிச்சைக்கு முன்பாக, சத்திரசிகிச்சை நாளில் வருகைதரல்

- உங்களுக்கு அறியத்தரப்பட்ட நேரத்திற்கு „நோயாளர் பதிவு நிலையத்தில்“ உங்கள் வருகையைப் பதிவு செய்யுங்கள். அதிகமான வேளைகளில் அங்கிருந்து நீங்கள் எமது வருகை-நிலையத்திற்கு SDS (same day surgery) அதேநாள் சத்திரசிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
- பராமரிப்பு நபர்கள், நீங்கள் உணவு உண்ணாமல் உள்ளீர்களா மற்றும் உங்களுக்குத் தேவையான மருந்துகளை எடுத்துள்ளீர்களா என்பதைப் பரிசோதனை செய்வார்கள்.
- தயவுசெய்து சத்திரசிகிச்சை நடைபெற முன்பாக உங்கள் உடைகளை மாற்றிக்கொள்ளுங்கள். உங்கள் உடைகள் மற்றும் பொருட்கள் சத்திரசிகிச்சைக்குப் பின்பாக வைத்தியசாலையில் நீங்கள் தங்கும் அறைக்கு எடுத்துச் செல்லப்படும், உங்கள் கைப்பை அங்கு ஏற்கனவே உங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும்.
- தீர்மானிக்கப்பட்ட நேரத்துக்கு நீங்கள் சத்திரசிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
- தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள், அவசர நிலைமைகள் காரணமாக அல்லது முன்பான சத்திர சிகிச்சை நீண்ட நேரம் நடைபெற்றதால் காலதாமதம் ஏற்படலாம். எங்களால் இயன்றவரை அது குறித்து உங்களுக்கு அறியத்தருவதுடன் இயலுமானால் எமது தோட்டத்தில் ஒருசிறு நடைபயில வாய்ப்பை ஏற்படுத்துவோம் (இதன்போது நீங்கள் உண்ணாமல் இருக்க வேண்டுமென்பதை கவனத்தில் கொள்ளுங்கள்!).

## சத்திரசிகிச்சைக்குப் பின்பாக

- சத்திரசிகிச்சைக்குப் பின்னர் நீங்கள் நெருக்கமான கண்காணிப்புக்காக சிறிது நேரம் கண்காணிப்பு அறையில் இருக்க வேண்டும். இரத்த அழுத்தம், இதய- மற்றும் சுவாசத் துடிப்பு சீராக இருப்பதுடன் உங்களுக்கு வலி குறைவடைந்தால், நீங்கள் நோயாளர் அறைக்கு மீளவும் அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
- தயவுசெய்து உங்களுக்கு வலி அல்லது குமட்டல் வருவதை உணர்வீர்களாக இருந்தால் நேரகாலத்துடன் அறியத்தாருங்கள். இது கண்காணிப்பு அறையில் இருக்கும்போது மற்றும் பின்னர் உங்கள் நோயாளர் அறையில் இருக்கும்போதும் பொருந்தும். நீங்கள் எவ்வாறு உணர்கின்றீர்கள் என்பதை நாங்கள் எவ்வளவு விரைவில் அறிகின்றோமோ, அவ்வளவு விரைவாக நாங்கள் செயற்பட முடியும்.
- நீங்கள் முதல்முறையாக நடப்பதற்கு உங்களுக்கு ஒரு பராமரிப்பு நபர் உதவிசெய்வார். தயவுசெய்து தனிமையில் உங்கள் கட்டிலைவிட்டு வெளியேறாதீர்கள்.

## வெளிநோயாளர் சிகிச்சை நிலைய சத்திரசிகிச்சைக்குப் பின்பான நடைமுறை ஒழுங்குகள்

- ஒவ்வொரு சத்திரசிகிச்சையைப் பொறுத்து, நீங்கள் அதேநாளில் வீட்டிற்குத் திரும்ப சந்தர்ப்பமுள்ளது.
- சத்திரசிகிச்சை மற்றும் மருந்துகளின் பின்விளைவுகள் மற்றும் மயக்க மருந்துகள் உங்கள் நிலைகுறித்த உங்களது கணிப்புகளை மற்றும் செயற்பாடுகளை குறைத்திருக்கலாம், எனவே மிகவும் கவனத்தில் கொள்ளவேண்டியது:

  - உங்கள் மோட்டார் வாகனத்தை வீட்டில் விட்டுவிடுங்கள், எவ்வேளையிலும் வாகனத்தைச் செலுத்தாதீர்கள்.
  - வயதுவந்த ஒரு நபர் உங்களை அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.
  - சிகிச்சை நிலையத்திலிருந்து சென்ற பின்னரான 24 மணித்தியாலங்களுக்கு எவ்வித வாகனத்தையும் செலுத்தாதீர்கள், எவ்வித ஆபத்தான இயந்திரத்தையும் இயக்காதீர்கள் மற்றும் அல்கோல் மதுசாரத்தைக் குடிக்காதீர்கள்.
  - சிகிச்சை நிலையத்திலிருந்து சென்ற பின்னரான 24 மணித்தியாலங்களுக்கு எவ்வித முக்கிய முடிவுகளையும் எடுக்காதீர்கள் மற்றும் விசேடமாக சட்டபூர்வமான கையொப்பத்தை இடாதீர்கள்.
  - தற்காலிகமாக விளையாட்டு அல்லது கடின உடல் உழைப்பிலிருந்து விலகியிருங்கள்.

வீட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டால் உ-ம்: கடுமையான வலி, குமட்டல், உடல்நலக்குறைவுடன் வியர்வை மற்றும் வெளிறல், அல்லது ஒரு இரத்தப்போக்கை உறுதிப்படுத்தினால், பொறுப்பான வைத்தியநிலையத்தில் கடமையிலிருக்கும் வைத்தியரைத் தொடர்பு கொள்ளுங்கள் (சத்திரசிகிச்சை, இரத்தக்குழாய்க்கான சத்திரசிகிச்சை, எலும்பியல் சிகிச்சை, சிறுநீரகச் சிகிச்சை, பெண் மருத்துவச் சிகிச்சை போன்றவற்றை தொலைபேசி நடுநிலையம் ஊடாக அழைக்கவும் 056 486 21 11).

## சம்மதித்தல் மற்றும் உறுதிப்படுத்தல்

நான் மேலுள்ள ஒழுங்கு விதிகளை வாசித்ததுடன் அதை விளங்கிக் கொண்டதாக இத்தால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்துகின்றேன். இந்த ஒழுங்குவிதிகளை கவனத்தில் எடுக்காததால் ஏற்படும் விளைவுகளுக்கு Kantonsspital Baden AG பொறுப்பு வகிக்காது.

Baden, ______________________

திகதி

______________________________

கையொப்பம் ஆண்.'.பெண் நோயாளர் அல்லது சட்டரீதியான பிரதிநிதி